டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.09.2026 புதன்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 086 | Madurai | Online Edition

# பல்லுயிர் பாதுகாப்பை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு தேசிய உயிரியல் பூங்கா ஏற்பாடு




புது தில்லி, செப்.29

பல்லுயிர்ப் பெருக்கம் உயிரின ஆவணப்படுத்துதல், வனவிலங்கு பாதுகாப்புப் போன்றவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் மக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு புதுதில்லியில் உள்ள தேசிய உயிரியல் பூங்கா ஏற்பாடு செய்திருந்தது.

இதன் ஒரு பகுதியாக வண்ணத்துப்பூச்சி, தும்பி போன்ற உயிரினங்களின் வகைப்பாடு குறித்து அறிந்து கொள்ளும் வகையில் நடைப்பயணம் நடைபெற்றது. காலை 6.30 மணி முதல் 10.30 மணி வரை நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பறவை நிபுணர் ரோகித் சர்மா மற்றும் ராம்வெர் ஆகியோர் வழி நடத்தினர்.

இந்த நிகழ்ச்சிக்கு பறவைகள், பட்டாம் பூச்சி ஆர்வலர்கள், இயற்கை ஆர்வலர்கள், மாணவர்கள், வனவிலங்கு புகைப்பட கலைஞர்கள், பல்லுயிர் பாதுகாப்பில் ஆர்வமுள்ள மக்கள் என

பல்வேறு தரப்பினரிடமிருந்து உற்சாக வரவேற்பு கிடைத்தது. இந்நிகழ்ச்சியில் தேசிய உயிரியல் பூங்கா இயக்குநர், அதிகாரிகள், வனத்துறை நிபுணர்கள் பங்கேற்றனர். இதில் பங்கேற்றவர்கள் 750-க்கும் மேற்பட்ட பறவை இனங்களைக் கண்டறிந்து அவற்றில் 47 பறவை இனங்களையும், 8 பட்டாம்பூச்சி இனங்களையும், 10 தும்பி வகைகளையும், 5 ஊசி தும்பி வகைகளையும் ஆவணப்படுத்தினர்.

பறவைகள், பட்டாம் பூச்சிகள், தும்பிகள் ஆகியவற்றின் சூழல் அமைப்புகள், அவற்றின் பண்புகள், பாதுகாப்புக் குறித்த முக்கியத்துவம் வாய்ந்தத் தரவுகளைத் துறைசார் நிபுணர்கள் பரஸ்பரம் பகிர்ந்து கொண்டனர். இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இயற்கையுடன் இணைந்து வாழ்வதற்கும், உயிரினங்களை அடையாளம் காணும் திறனை வளர்த்துக் கொள்வதற்கும், பல்லுயிர், வனவிலங்கு பாதுகாப்புக் குறித்த புரிதலுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

# கன்னங்குறிச்சியில் உளுந்து பயிரில் பண்ணைப்பள்ளி



சேலம், செப்.29

சேலம் வட்டாரம், கன்னங்குறிச்சியில் பயறுவகைப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற பண்ணைப் பள்ளியின் மூன்றாம் வகுப்பு நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் கந்தசாமி, விவசாயிகளை வரவேற்று ஊட்டச்சத்து பற்றாக்குறை மேலாண்மை முறைகள் வளர்ச்சி ஊக்கிகள் பயன்படுத்துவது மற்றும் வறட்சி மேலாண்மை முறைகளை தெரிவித்தார். உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தின் வேளாண்மை அலுவலர் அசோக், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகளை விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் விஜயகுமார், வேளாண்மை தோட்டக்கலை மற்றும் வேளாண் விற்பனை துறையில் செயல் படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு தெரிவித்தார். பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில் நுட்ப மேலாளர் ஷெல்லி ராஜ்குமார் செய்திருந்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், செப்.29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அக்டோபர் மாத பயிற்சி 5.10.26 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/நபர் நேரிடையாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590/நபர் (அடையாள சான்று அவசியம்). பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்யானது காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611336, 6611226, 95432 70758, 63792 98064, 93618 89846, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# AI அடிப்படையிலான கல்வித் தொழில்நுட்பப் புதுமைகளுடன் CII Edu-Tech Expo 2026 - COXBIT, TNAU பங்கேற்பு




கோயம்புத்தூர், செப்.29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் Centre of Excellence in Biotechnology (COXBIT), CII Edu-Tech Expo 2026 கண்காட்சியின் 2-ஆம் பதிப்பில் பங்கேற்றது. இந்திய தொழில்துறை கூட்டமைப்பு (CII) சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்காட்சி செப்டம்பர் 24 முதல் 26, 2026 வரை சென்னை வர்த்தக மையத்தில், சென்னையில் நடைபெற்றது. Powering Education with Technology என்ற கருப்பொருளில் நடை பெற்ற இம்மூன்று நாள் கண்காட்சியில், கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், புதுமையாளர்கள், தொடக்க நிலை நிறுவனங்கள் (Start-ups), தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த பங்குதாரர்கள் பங்கேற்று, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தியதுடன், பல்வேறு ஒத்துழைப்பு வாய்ப்புகளையும் ஆராய்ந்தனர்.

COXBIT தனது தொடக்க நிலை நிறுவனங்களுக்கான (Start-up) சூழலமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக் கைகளை காட்சிப்படுத்தியது. வேளாண்மை, உயிரித் தொழில் நுட்பம், உணவுத் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த பயன்பாடுகள் உள்ளிட்ட துறைகளில், தொடக்க நிலை நிறுவனங்கள், மாணவர்கள் மற்றும் தொழில் துறையினருக்குத் தேவையான Incubation வசதிகள், ஆய்வக ஆதரவு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்கி, ஆராய்ச்சி, புதுமை மற்றும் தொழில்முனைவோரை ஊக்கு வித்து வரும் COXBIT-ன் செயல்பாடுகள் இக்கண்காட்சியில் எடுத்துக் காட்டப்பட்டன.

COXBIT–ன் பங்கேற்பின் ஒரு பகுதியாக, COXBIT சூழலமைப்புடன் இணைந்து செயல்படும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த நிறுவனமான Home Idea Technologies, கல்வி மற்றும் கற்றல் பயன்பாடுகளுக்கான AI அடிப்படையிலான குரல்வழி கல்வித் தீர்வுகளை (AI-based voice-assisted educational solutions) காட்சிப்படுத்தியது.

நிகழ்ச்சியில் உரையாற்றிய தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறை அமைச்சர் பி.விஸ்வநாதன், தொழில்நுட்பம் மற்றும் வலுவான ஒத்துழைப்பின் மூலம் கல்வி நிறுவனங்களுக்கும் தொழில்துறைக்கும் இடையிலான இணைப்புகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். பாடத்திட்ட மேம்பாடு, சிறப்பு அழைப்புப் பேராசிரியர்கள், தொழில் துறை ஆதரவுடன் கூடிய ஆய்வகங்கள், பயிற்சிப் பணிகள் (Internships), தொழில்துறை கல்வி நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) மற்றும் வேலை வாய்ப்பு சார்ந்த முன்னெடுப்புகள் ஆகியவற்றில் தொழில் துறையின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

## அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் சிறப்பு பருவ பயிர் காப்பீடு திட்டத்தில் பயன்பெற அழைப்பு!

சேலம், செப்.29

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் சிறப்பு பருவ பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் பிரீமியத்தொகை செலுத்தி பயன்பெற அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சண்முகப்பிரியா அறிக்கை விடுத்துள்ளார்.

அயோத்தியபட்டினம் வட்டாரத்தில் எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும், நிலையான வருமானம் கிடைக்க செய்து அவர்களை விவசாயத்தில் நிலைபெற செய்யவும், பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் வறட்சி, வெள்ளம், புயல், சூறாவளிக்காற்று, அதிக பரப்பளவில் பூச்சி, நோய் தாக்குதல், நிலச்சரிவு மற்றும் இயற்கை சீற்றத்தினால் தீப்பிடித்தல் ஆகிய இயற்கை இடர்பாடுகளால்

ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஏற்றவாறு பயிர் அறுவடை பரிசோதனை அடிப்படையில் பயிர் காப்பீட்டு தொகை வழங்கப்படும்.

தற்போது அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் வலசையூர் மற்றும் காரிப்பட்டி குறுவட்டங்களில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள்(குத்தகை விவசாயிகள் உட்பட) வங்கியில் பயிர் கடன் பெறும் மற்றும் பயிர் கடன் பெறாத விவசாயிகள் நெற்பயிருக்கு வருகின்ற அக்டோபர் மாதம் 16ஆம் தேதிக்குள் ஏக்கருக்கு ரூ. 580/- பிரிமிய தொகையினை செலுத்தி பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம் என தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயிகள் முன்மொழி படிவத்துடன் அடங்கல், நடப்பில் உள்ள சேமிப்பு வங்கி கணக்கு புத்தகம், ஆதார் அட்டை நகல், நில உரிமை பட்டா ஆகிய ஆவணங்களுடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்கள் மூலமாக உரிய பிரிமியத் தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்து பயன்பெற கேட்டுக் கொண்டுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி




விழுப்புரம், செப்.29

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டாரம், வேளாண்மை துறை ஆத்மா திட்டத்தின் மூலம் ஆலங்குப்பம் கிராமத்தில் அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர்கள் செந்தமிழ் மற்றும் சிபி செபஸ்டியன் ஆகியோர் கலந்து கொண்டு தொழில்நுட்ப உரையாற்றினார்.

இப்பயிற்சியில் அங்கக வேளாண் இடுபொருட்களான ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம், பஞ்சகாவியா, மீன் அமிலம், ஐந்திலை கரைசல், இஞ்சி பூண்டு கரைசல் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் உபயோக முறைகள் குறித்தும், விவசாயிகள் பங்கேற்பு முறையில் அங்கக சான்றிதழ் பெறும் முறைகள் குறித்தும் விளக்கமாக கூறினார்.

மேலும் அங்கக வேளாண்மை முறையில் விவசாயம் செய்யும் போது உற்பத்தி குறைவாக இருப்பது குறித்தும், ஆனால் உற்பத்தி செய்த பொருட்களுக்கு விலை கூடுதலாக கிடைப்பது குறித்தும் கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நரசிம்ம ராஜ் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மையில் அங்கக வேளாண் இடு பொருட்களின் பயன்பாடு குறித்து கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சந்திரசேகரன் மற்றும் அய்யனார் செய்திருந்தனர். பயிற்சியில் சுமார் நாற்பது மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் மையத்தில் அக்டோபர் மாதம் நடைபெறும் பயிற்சியின் விபரங்கள்.

| வ. எண் | நாள் | தலைப்பு & பயிற்சி நடைபெறுமிடம் |
|---|---|---|
| 1. | 01.10.26 | நெற்பயிரில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை<br>இடம் : சாத்தப்பாடி (மேல்புவனகிரி வட்டாரம்) |
| 2. | 07.10.26 | கூட்டு கெண்டை மீன் வளர்ப்பு<br>இடம் : பரங்கிப்பேட்டை |
| 3. | 07.10.2 6 | கறவை மாடுகளுக்கு தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை பயிற்சி<br>இடம் : குமாராட்சி |
| 4. | 08.10.26 | சிறுதானியங்களில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல்<br>இடம் : நல்லூர் |
| 5. | 09.10.26 | ஆடு வளர்ப்பு பயிற்சி<br>இடம் : கே.வி.கே, விருத்தாசலம் |
| 6. | 12.10.26 | கோழிவளர்ப்பு பயிற்சி<br>இடம் : கே.வி.கே, விருத்தாசலம் |
| 7. | 13.10.26 | தொழில்முனைவோருக்கான காளான் வளர்ப்பு பயிற்சி (கட்டணப் பயிற்சி)<br>இடம் : கே.வி.கே, விருத்தாசலம் |
| 8. | 14.10.26 | பண்ணை இயந்திரங்கள் மற்றும் அதன் பராமரிப்பு<br>இடம் : கே.வி.கே, விருத்தாசலம் |
| 9. | 14.10.26 | மண் வள மேலாண்மைபயிற்சி<br>இடம் : கிள்ளை (பரங்கிப்பேட்டை வட்டாரம்) |
| 10. | 15.10.26 | கூட்டுகெண்டைமீன் வளர்ப்பு<br>இடம் : அகரம் |
| 11. | 20.10.26 | பயறுவகை பயிர்களில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள்<br>இடம் : பிஞ்சனூர் |

12. 21.10.26 காளானில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல்
இடம் : கல்குணம்

13. 22.10.26 பயிர் சுழற்சி முறை குறித்த விழிப்புணர்வு பயிற்சி
இடம் : பெரியகோட்டுமுளை

14. 23.10.26 சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள்
இடம் : கூளாப்பாடி

15. 28.10.26 விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் முறை பற்றிய விழிப்புணர்வு பயிற்சி
இடம் : குமாரமங்களம்

16. 29.10.26 தொழில்முனைவோருக்கான தளிர் கீரை வளர்ப்பு பயிற்சி (கட்டணப் பயிற்சி)
இடம் : கே.வி.கே, விருத்தாசலம்

17. 30.10.26 விதை நேர்த்தி செயல்முறைகள் மற்றும் அங்கக சான்றளிப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி
இடம் : கே.வி.கே, விருத்தாசலம்

# பயறுவகை பயிர்களில் தொகுப்பு முறை முதல் நிலை செயல் விளக்கத் திட்டம்




மதுரை, செப்.29

மதுரை மாவட்டம், சேடப்பட்டி வட்டம், ராமநாதபுரம் கிராமத்தில் ‘பயறுவகை பயிர்களில் தொகுப்பு முறை முதல் நிலை செயல் விளக்கத் திட்டத்தின் கீழ் ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி,சுரேஷ், தலைமை வகித்து உளுந்து, துவரை, பாசிப்பயறு, தட்டைப்பயறு பயிர்களில் பூச்சியில் தாக்கம் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி விரிவாக விளக்கம் அளித்தார். இணைப்பேராசிரியர் முனைவர் கு.ஆனந்த், தொழில்நுட்ப உரையாற்றினார். பயறு வகை பயிர்களில் சாகுபடி குறித்து தொழில்நுட்ப உரை அளித்தார், விவசாயிகளுக்கு பயிர் வகை பயிர்களில் விதை

அமிர்தம் கொண்டு விதை நேர்த்தி செய்து செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. பயறுவகை பயிர்களில் உளுந்து, துவரை மற்றும் பாசிப்பயிறு விதைகளில் அதிக மகசூலை பெறுவதற்காக TNAU பயறு ஒண்டர் தெளிப்பு முறைகள் பற்றியும், அதனால் அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகளையும் விரிவாக எடுத்துரைத்தார். இத்திட்டத்தின் கீழ் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இடுப்பொருளாக தட்டைப்பயறு மற்றும் உளுந்து விதையும், விதை அமிர்தமும் மற்றும் பயறு ஒண்டர் வழங்கப்பட்டது. தொழில்நுட்ப உதவியாளர் மு.மூவேந்திரன், மாரிமுத்து ஆகியோர் முகாமை ஒருங்கிணைந்தனர்.



# தமிழகத்தில் எல்-நினோ தாக்கம் எப்படி இருக்கும்? நிபுணர் குழுவின் அறிக்கை!

எல் நினோ காரணமாக தமிழகத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் அதிக மழையும், வெள்ளமும் ஏற்படலாம். அதன்பிறகு தண்ணீர் பற்றாக்குறை, வறட்சி, கடுமையான வெப்பமும் எதிர் கொள்ள வேண்டியதாக இருக்கலாம் என்று தமிழ்நாடு அரசின் நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. எல் நினோ என்றாலே மழை குறைந்து வறட்சி ஏற்படும் என்ற பொதுவான கருத்து தமிழகத்தை பொருத்தவரை சரியாக இருக்காது என்ற தகவலையும் கூறியுள்ளது சற்று ஆறுதலாக உள்ளது.

மேலும் எல்-நினோ தாக்கம் குறித்து ஆய்வு செய்த நிபுணர்குழு பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தமிழக அரசு தயாராக இருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்து உள்ளது.

### வெப்ப நிலை அதிகரிப்பு?

கடந்த ஆகஸ்ட் 26 நிலவரப்படி, பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதியில் கடல் மேற்பரப்பு வெப்ப நிலை இயல்பைவிட அதிகமாக இருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது. கடல் மேற்பரப்பு வெப்ப நிலை இயல்பை விட 2.20 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்தாகவும் தெரிகிறது. 2026ஆம் ஆண்டின் இறுதி மற்றும் 2027ஆம் ஆண்டின் தொடக்கம் வரை நீட்டிக்க கூடும் என்று கணிக்கப்படுகிறது.

### மழை பொழிவு எப்படி?

அக்டோபர் முதல் டிசம்பர் 2026 வரை வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழகம் உள்ளிட்ட தென்னிந்திய பகுதிகளில் இயல்பை விட அதிக மழை பெய்யக்கூடும் என்று பருவ கால கணிப்பு தெரிவிக்கிறது.

தமிழகத்தில் இயல்பை விட 50 முதல் 200 மிலி. மீட்டர் வரை கூடுதலாக மழை பெய்யக்கூடும் என்ற கணிப்பும் இதில் இடம்

பெற்றுள்ளன. இதனால் இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழையின் போது அதிக மழையும், நகர்ப்புறங்களில் வெள்ளமும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதனை எதிர் கொள்ள அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். ஆனால் தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான மழை பெய்யும் என்று கூறமுடியாது. ஒரு பகுதியில் அதிக மழை பொழிவும் மற்றொரு பகுதியில் மழை பற்றாக் குறையும் ஏற்படலாம். இதனால் அதிக மழை பெய்யும் இடங்களில் மழை நீரை சேமிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க படவேண்டும்.

டெல்டா மாவட்டங்களிலிருந்து தூத்துக்குடி, திருநெல்வேலி கடலோர பகுதியில் மிக கன மழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கப்படுகிறது. மொத்தத்தில் எல்– நினோ பாதிப்பு ஒரு மழை பிரச்சனையாக மட்டும் பார்க்காமல், பல்வேறு துறைகளின் உள்ளடக்கிய பிரச்சனையாக பார்க்க வேண்டும்.

கொரானாவுடன் வாழ பழகிய நாம், இந்த எல்நினோவை திட்டமிட்டு சந்திப்போம். சாதனை படைப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# விவசாயிகளுக்கு விதைப்பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்த ஆலோசனை

திண்டுக்கல், செப்.29

விவசாயத்திற்கு முதல் முக்கியமான இடுபொருள் விதை. அதிக மகசூல் மற்றும் தரமான விதை உற்பத்திக்கு வித்திடுவது தரமான விதைகளே. எனவே விவசாயிகள் விதைத்திடும் விதை தரமானதாக உள்ளதா என ஆய்வு செய்து விதைத்திட வேண்டும் என திண்டுக்கல் விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ப.பிரபாகரன், ம.ஜமுனா ராணி தெரிவித்துள்ளனர்.

விதையின் தரம் நான்கு முக்கிய காரணிகளை அடிப் படையாகக் கொண்டது.

1. புறத்தூய்மை, 2. முளைப்புத்திறன், 3. ஈரப்பதம், 4. பிறரககலப்பு.

விதையின் புறத்தூய்மை என்பது விதைகளில் கலந்து உள்ள கல், மண், தூசி, முதிர்ச்சி அடையாத விதைகள் மற்றும் விதைகளின் உடைந்த பாகங்களை குறிக்கும். இந்தபொருட்கள் விதைகளில் அதிக அளவு கலந்து இருந்தால் விதைகளின் தரம் பாதிக்கப்படும். எனவே விதைகளை புறத்தூய்மை செய்து விதைப்பிற்கு பயன்படுத்த வேண்டும். பொதுவாக விதையின் புறத்தூய்மை 98% இருக்க வேண்டும். அதற்கு குறைவாக இருந்தால் தரமற்ற விதையாகும்.

விதைகளின் ஈரப்பதமானது விதை முளைப்பிற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது மழைக்காலம் என்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை அதிக ஈரப்பதத்துடன் சேமிக்கும் போது பாக்டீரியா, பூஞ்சாணம் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இதன் மூலம் விதையின் தரம் பாதிக்கப்படும் சூழல் உருவாகும்.

எனவே விவசாயிகள் விதைப்பிற்கு அல்லது சேமிப்பதற்கு முன்பாக தங்களிடம் உள்ள விதையின் ஈரப்பதத்தை கண்டறி வது அவசியம். பொதுவாக நெல்லிற்கு 13%, சோளத்திற்கு 12%, பயிறுவகை பயிர்களுக்கு 9%, காய்கறிகளுக்கு7% இருத்தல் வேண்டும்.


முளைப்புத்திறன் என்பது மிக முக்கிய காரணியாக கருதப்படுகிறது. பயிர் எண்ணிக்கையை சரியாக பராமரித்து அதிக மகசூலை பெற முளைப்புத்திறன் அவசியம். ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத்திறனானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக நெல்லிற்கு 80%, பயிறுவகை பயிர்களுக்கு 75%, கத்தரி, தக்காளி, கீரை வகைகளுக்கு 70%, பாகல், சுரை மற்றும் பூசணிக்கு 60% நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் அவை தரம் குறைவான விதையாகும்.

பிறரக கலவன் என்பது ஒரே பயிரைச் சேர்ந்த வேறு ரக விதைகள் கலந்து இருப்பது ஆகும். பயிர் வகைப் பயிர்களுக்கு ஒரு கிலோவிற்கு பத்திற்கும் அதிகமான எண்ணிக்கையிலான பிறரக கலவன் இருந்தால் அவற்றின் தரம் குறைவானதாக கருதப்படும். பிறரக கலவன் இல்லாத விதைகளை தேர்வு செய்து விதைப்பதன் மூலம் விதையின் தரத்தை மேம்படுத்தலாம்.

எனவே விவசாயிகள் தங்களின் விதையின் தரத்தினை பரிசோதனை மூலம் அறிந்து கொள்ள திண்டுக்கல், உழவர் மைய வளாகத்தில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்தை அணுகி விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- கட்டணமாக செலுத்தி பயனடையலாம் என தெரிவித்துள்ளனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**





கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# எல்-நினோவும் தமிழக வேளாண்மையும் : மாறும் பருவமழையை எதிர்கொள்ளும் வழிகள்

பசிபிக்பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பம் இயல்பைவிட உயரும் நிகழ்வே எல்நினோ. 2026ஆம் ஆண்டு செப்டம்பர் நிலவரப்படி, மிக வலிமையான எல்நினோ உருவாகியுள்ளது; இதன் குறியீடு +2.5ஐயும் மேல் பதிவாகியுள்ளதாகவும், 2027 தொடக்கம் வரை நீடிக்கக்கூடும் எனவும் முன்னறிவிப்புகள் தெரிவிக்கின்றன. இது இந்தியாவின் பல பகுதிகளைப் போலவே தமிழகத்தின் வேளாண்மையையும் பல வழிகளில் பாதிக்கக்கூடும்.

## தமிழகத்தின் மழை அமைப்பு

இந்தியாவின் பிற மாநிலங்களைப் போலன்றி, தமிழகம் தென்மேற்குப் பருவமழையை விட வடகிழக்குப் பருவ மழையையே (அக்டோபர்-டிசம்பர்) பெரிதும் நம்பியுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பகுதியில் அமைந்துள்ளதால், தென்மேற்குப் பருவத்தில் மாநிலத்திற்குக் குறைவா மழையே கிடைக்கிறது. ஆனாலும் கர்நாடகா மற்றும் கேரளாவில் பெய்யும் தென்மேற்குப் பருவமழையே காவிரி, பவானி, அமராவதி போன்ற ஆறுகளின் நீர்வரத்தைத் தீர்மானிக்கிறது. எல்நினோ ஆண்டுகளில் தென்மேற்குப் பருவமழை பலவீனமடையும் வாய்ப்பு அதிகம் என்பதால், மேட்டூர் அணை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும், டெல்டா பாசனமும் பாதிக்கப்படலாம்.

## வடகிழக்குப் பருவமழையில் எல்நினோவின் தாக்கம்

பொதுவாக எல்நினோ ஆண்டுகளில் தென்னிந்தியாவில் வடகிழக்குப் பருவமழை இயல்பை ஒட்டியோ அதற்கு மேலோ இருக்கும் போக்கு காணப்படுகிறது. ஆனால் இது எப்போதும் உறுதியான விதி அல்ல; இந்தியப் பெருங்கடல் இருமுனை (IOD) போன்ற பிற காரணிகளும் மழையைத் தீர்மானிக்கின்றன. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் (TNAU) முன்னறிவிப்பின்படி, 2026 வடகிழக்குப் பருவத்தில் சுமார் 468 மி.மீ. மழை எதிர்பார்க்கப்படுகிறது; இது நீண்டகால சராசரியான 464 மி.மீ. ஐ விடச் சற்று அதிகம். ஆயினும் மழைப்பரவல் சீராக இருக்காது எனவும், மயிலாடுதுறை, செங்கல்பட்டு போன்ற

கடலோர மாவட்டங்களில் இயல்பைவிட அதிகமாகவும், உள்மாவட்டங்களில் பற்றாக்குறையாகவும் இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. சில ஆய்வாளர்கள் வலிமையான எல்நினோ மழையைத் தாமதப்படுத்தவோ குறைக்கவோ கூடும் என எச்சரிப்பதால், விவசாயிகள் இருசூழல்களுக்கும் தயாராக இருப்பது நல்லது.

**பயிர்கள் மீதான தாக்கம்**

**நெல்**

காவிரி டெல்டாவில் குறுவை, சம்பா சாகுபடிக்கான நீர் கிடைப்பது தென்மேற்குப் பருவ நீர்வரத்தைச் சார்ந்தது. கடலோரப் பகுதிகளில் கனமழை அறுவடைக் காலத்தில் பெய்தால் நெற் பயிர் சாய்தல், முளைத்தல், நீர் தேங்குதல் போன்ற இழப்புகள் ஏற்படலாம்.

**நிலக்கடலை, சிறுதானியம், பயறு வகைகள்**

மானாவாரியாகப் பயிரிடப்படும் உள்மாவட்டங்களில் மழை பற்றாக்குறை அல்லது இடைவெளி ஏற்பட்டால், முளைப்பு மற்றும் பூக்கும் பருவத்தில் வறட்சி அழுத்தம் விளைச்சலைக் குறைக்கும்.

**கரும்பு, வாழை**

அதிக வெப்பம் மற்றும் நீர்ப்பற்றாக்குறை விளைச்சலைப் பாதிக்கும்; பலத்த காற்றுடன் கூடிய மழை வாழைக்கு சேதம் விளைவிக்கலாம்.

**தென்னை மற்றும் தோட்டப்பயிர்கள்**

நீண்ட வறட்சி மற்றும் வெப்பம் தென்னை, தேயிலை, காபி போன்ற பயிர்களின் உற்பத்தியில் பிரதிபலிக்க நேரிடும்.

**வெப்பம், பூச்சி மற்றும் நோய்கள்**

எல்நினோ ஆண்டுகளில் பகல் மற்றும் இரவு வெப்பநிலை உயர்வதால் பயிர்கள் வெப்ப அழுத்தத்திற்கு உள்ளாகின்றன. வெப்பமும் ஈரப்பதமும் மாறி மாறி வரும் போது, உறிஞ்சும் பூச்சிகள், படைப்புழு போன்ற பூச்சிகளும், பூஞ்சை நோய்களும் பரவும் வாய்ப்பு அதிகரிக்கிறது. எனவே வயல்களைத் தொடர்ந்து கண்காணிப்பது அவசியம்.

**விலை மற்றும் பொருளாதாரத் தாக்கம்**

விளைச்சல் குறைந்தாலோ, அறுவடைக்கால மழையால் தரம் பாதிக்கப்பட்டாலோ சந்தையில் அரிசி, பருப்பு, எண்ணெய் வித்துகள், காய்கறி விலைகளில் ஏற்ற இறக்கம் ஏற்படலாம். இது சிறு, குறு விவசாயிகளின் வருமானத்தையும் கிராமப்புறப் பொருளாதாரத்தையும் நேரடியாகப் பாதிக்கும்.

**விவசாயிகளுக்கான பரிந்துரைகள்**

**வானிலை தகவல்**

TNAU மற்றும் இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்புகளைத் தொடர்ந்து பின்பற்றி விதைப்பு நேரத்தை முடிவு செய்யுங்கள்.

**பயிர் தேர்வு**

நீர்ப்பற்றாக்குறை உள்ள பகுதிகளில் குறுகிய கால, வறட்சி தாங்கும் இரகங்களையும் சிறு தானியங்களையும் தேர்ந் தெடுங்கள்;

கடலோரப் பகுதிகளில் நீர்தேக்கத்தைத் தாங்கும் இரகங்கள் ஏற்றவை

**நீர் மேலாண்மை**

சொட்டு நீர்ப்பாசனம், மூடாக்கு, பண்ணைக் குட்டைகள் அமைத்தல், வடிகால் வசதி ஆகியவற்றின் மூலம் நீரைச் சேமிக்கவும், வெள்ளத்தைத் தவிர்க்கவும் முடியும்.

**காப்பீடு**

பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் உரிய காலத்தில் பதிவு செய்து இழப்பீட்டுக்கு தயாராக இருங்கள்.

**முடிவுரை**

எல்நினோ தமிழகத்திற்கு ஒரே மாதிரியான விளைவை ஏற்படுத்தாது; ஓரிடத்தில் மழை மிகுதி, மற்றோரிடத்தில் வறட்சி என்ற சமமற்ற நிலையே அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

முன்னறிவிப்புகளை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடல், நீர் சேமிப்பு, பொருத்தமான பயிர் மற்றும் இரகத் தேர்வு ஆகிய வற்றின் மூலம் இந்த இடர்பாடுகளைப் பெருமளவு குறைக்க முடியும்.

கட்டுரை ஆசிரியர்

***இரா. லோகேஷ், முனைவர் பட்டப் படிப்பு மாணவர், தாவர நோயியல் துறை, த.நா.வே.ப, கோவை. தொடர்பு எண் : +91 99449 99214, மின்னஞ்சல் : lokeshpathologist@gmail.com***



# இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு குறித்து ஒரு நாள் பயிற்சி




கிருஷ்ணகிரி, செப்.29

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் கும்ளாபுரம் கிராமத்தில் இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு பற்றி விவசாயிகளுக்கு உள்மாவட்ட அளவிலான ஒரு நாள் பயிற்சி இன்று (28.09.26) நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குநர், தளி சி.முருகன், இடுபொருட்களான பஞ்சகாவ்யா, இயற்கை பூச்சிவிரட்டி, மீன் அமிலம், ஜீவாமிர்தம், கன ஜீவாமிர்தம், அமிர்தகரைசல், பிஜாமிருதம், நீம் அஸ்திராதயார் செய்யும் தொழில்நுட்ப முறைகள் பற்றியும்,மஞ்சள் வண்ண அட்டை, சூரிய விளக்கு பொறி பயன் படுத்துவதன் மூலம் தீமை செய்யும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் எனவும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். மேலும் மண் மாதிரி சேகரித்தலின் முக்கியத்துவம் மண் மாதிரி சேகரிக்கும் தொழில்நுட்ப முறைகள் பற்றியும் மேலும் வேளாண்மைத் துறையில் கொடுக்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும், உழவன் செயலி பயன்கள் பற்றியும் விவசாயி களுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

மேலும் மண்புழு உரம் தயாரிப்பு, பயன்கள் பற்றியும், ஊட்டமேற்றிய தொழுஉரத்தின் பயன்கள் பற்றியும் விவசாயி களுக்கு கூறினார். மண்ணின் வளத்தை மேம்படுத்த நுண்ணூட்ட உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் பயன்படுத்து வதன் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றியும், தரமான விதைகளை தேர்ந்தெடுக்க விதை நேர்த்தி செய்து விதைகளை விதைப்பதன் மூலம் பயிர் விளைச்சலை அதிகபடுத்தலாம் எனவும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

அதியமான் வேளாண் கல்லூரி, உதவி பேராசிரியர், பாக்யலட்சுமி, இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்த இயற்கை பூச்சி விரட்டி தயார் செய்ய வேப்ப இலை – 1 கிலோ, ஊமத்தை இலை – 1 கிலோ, நொச்சி இலை – 1 கிலோ, எருக்கு இலை – 1 கிலோ, கருவேப்பிலை அல்லது கொத்தமல்லி – 1 கிலோ, இஞ்சி – 1 கிலோ, பூண்டு – 1 கிலோ, சின்ன வெங்காயம் – 1 கிலோ என மேற்குறிப்பிட்ட இலை வகைகளை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொண்டு மண் பானைக்குள் போட்டு அதனுடன் 20 லிட்டர் கோமியம் ஊற்றி மண்பாணையை வாய் பக்கம் மட்டும் தெரியும் படி மண்ணில் புதைத்துவிட வேண்டும். பின்பு வாய் பகுதியை மூடி வைத்து மூடி விட்டு ஏழு நாட்கள் கழித்து திறந்து அனைத்து வகைப் பயிர்களுக்கும் தெளிப்பதின் மூலம் இயற்கை முறையில் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்,

இக்கரைசலை 10 லிட்டர் அளவுள்ள தெளிப்பானுக்கு 500 மில்லி என்ற அளவில் கலந்து காலை (அ) மாலை வேளையில் தெளிக்கலாம் மேலும் 20 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கலாம், இக்கரைசலைத் தெளிப்பதன் மூலம் அஸ்வினி, இலைப்பேன் போன்ற தீமை செய்யும் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம் எனவும் விவசாயிகளுக்கு கூறினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் ர.சிந்தனா மண்ணில் உள்ள நாடாப் புழுக்களை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் பயன் படுத்துவதன் பயன்கள் பற்றியும். டி.விரிடி, உயிர் உரங்களின் முக்கியத்துவம் பற்றியும், மண்ணின் வளத்தை மேம்படுத்தும் தொழில்நுட்ப முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்க மளித்தார். மேலும் அட்மா திட்ட செயல்பாடுகள், பயன்கள் பற்றியும் விவசாயிகளுக்கு கூறினார்.

இப்பயிற்சியில் மீன் அமிலம், ஜீவாமிர்தம் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு மீன் அமிலம், ஜீவாமிர்தம் தயாரிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப் பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் ர.சிந்தனா செய்திருந்தார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பஞ்சகாவ்யா தயாரிக்கும் முறை மற்றும் வணிகப்பயிரில் பஞ்சகாவ்யாவின் நன்மைகள்

கடலூர், செப்.29

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் புலத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் AB Batch மாணவ மாணவிகள், சிஸிபுறாயூ 401- Agriculture Waste Management DELAGR 402- Organic Production Technology (Experi-ential learning- அனுபவ வழிக் கற்றல்) பாடங்களின் ஒரு பகுதியாக, பஞ்சகாவ்யா (panchagavya) தயாரிப்பு தொடர்பான நடைமுறை பயிற்சியை கல்வி மற்றும் பயிற்சி நோக்குடன் முறையாக மேற்கொண்டனர்.

இந்த பயிற்சியில் மொத்தம் 50 மாணவர்கள் பங்கேற்று, வேளாண் கழிவுகளை பயனுள்ள உயிர் உரமாக மாற்றும் நடைமுறை அறிவை பெற்றனர்.

**பஞ்சகாவ்யா தயாரிக்கும் முறை (panchagavya Preparation Procedure)**

| | |
|---|---|
| மாட்டுச் சாணம் | – 7 கிலோ |
| மாட்டு நெய் | – 5 கிலோ |

இந்த இரண்டு பொருட்களையும் நன்றாக காலை மற்றும் மாலை நேரங்களில் கலக்கி மூன்று நாட்கள் வரை வைக்கவும்.

| | |
|---|---|
| மாட்டு சிறுநீர் | – 15 லிட்டர் |
| பால் | – 8 லிட்டர் |
| தயிர் | – 8 லிட்டர் |

மூன்று நாட்கள் கழித்து மாட்டு சிறுநீர் மற்றும் பால் இதனுடன் கலக்கி தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் நன்றாகக் கலக்கி 15 நாட்கள் வரை வைக்கவும். 15 நாட்கள் கழித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை அதனுடன் வைத்தால் 30 நாட்களுக்குள் பஞ்சகாவ்யா தயாராகி விடும்.

**தயாரிக்கும் முறை**

மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து பொருட்களையும் மண் பானை, கற்காரைதொட்டி அல்லது பிளாஸ்டிக் கேன்களில் மேலே கொடுக்கப்பட்டுள்ள வரிசைகளில் சேர்க்கவும் கொள்கலனை நிழலில் திறந்து வைக்கவும். உட்பொருளை நாளொன்றிற்கு இரு முறை காலையும், மாலையும் கொதிக்க வைக்கவும். 30 நாட்களுக்கு பிறகு பஞ்சகாவ்யா கரைசல் தயாராகி விடும்.

இதை தயாரிக்கும் போது எருமையுடைய பொருட்களை கலக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உள்ளூர் மாடுகளைவிட வெளிநாட்டு மாடுகளுக்கு ஆற்றல் அதிகம். இதனை நிழலில் தான் வைக்கவும். கம்பி வலைக் கண் அல்லது பிளாஸ்டிக் கொசு வலையை அதன் மேல் மூடி வைக்கவும் ஈக்கள் முட்டை இடுவது மற்றும் கரைசலில் ஈ இன காலில்லா புழுக்கள் உருவாவதை தடுக்க (-). கரும்புசாறு இல்லையென்றால் 500 கிராம் வெள்ளத்தை மூன்று லிட்டர் தண்ணீரில் கலக்கி பயன்படுத்தலாம்.

**பஞ்சகாவ்யாவின் இயல்பு வேதிப்பொருள் மற்றும் உயிரியல் பொருட்கள்.**

சாணம், கோமியம், நெய், பால், தண்ணீர், தயிர், வெல்லம், இளநீர், பூவன்பழம்.

**வணிகப் பயிரில் பஞ்சகாவ்யாவின் நன்மை பயக்கும் விளைவுகள்**

பெண் பூக்களில் அடர்ந்த பூக்கள் உருவாவதற்கு தூண்டப்படும். ஒழுங்கற்ற அல்லது மாறி அமைந்த தாங்கியின் வழக்கம் இதில் ஏற்படாது. இது பூக்களில் மட்டுமல்லாது பழங்களிலும் தான். 12 நாட்கள் வரை அரையுடைய வெப்பநிலையில் வைத்தால் நல்ல தரத்தை அதிகப்படுத்த உதவும். நறுமணம் மற்றும் மணம் அதிக அளவில் இருக்கும்

**எலுமிச்சை**

வருடம் முழுவதும் தொடர்ச்சியாக பூக்கள் பூத்துக் கொண்டே இருக்கும், பழங்கள் நல்ல மணத்துடனும், சதையுடனும் இருக்கும், 10 நாட்களுக்கு இதனுடைய வாழ்வு உயர்த்தப்படும்,

**கொய்யா**

அதிகப்படியான மொத்த தின்மக் கரைசல், ஐந்து நாட்களுக்கு இதனுடைய வாழ்வு உயர்த்தப்படும்.

**வாழை**

(3% கரைசல் (100 மி.லி.) நீர்ப்பாசன தண்ணீர் (-) கரைசலுடன் தெளித்து, ஆண் மொட்டுக்களை அகற்றிய பின் குலையின் கொப்பூழுடன் சேர்த்து கட்டவும். குலையின் அளவு ஒரே சீராக இருக்கும். ஒரு மாதத்திற்கு முன்பு அறுவடை செய்யப்பட்டிருக்க வேண்டும். மேல் மற்றும் கீழே உள்ள கைகள் ஒரே சீராக பெரியதாக இருக்கும்.

**மஞ்சள்**

22% மகசூல் அதிகமாகும். மஞ்சளின் அளவு பெரியதாக இருக்கும். குறைந்த வடிகால் சேதாரம், தாய் மற்றும் விரல் வேர்த் துண்டுகளின் விகிதம் குறுகி இருக்கும். தும்பி, சிலந்தி ஆகிய பூச்சிகளின் எண்ணிக்கையை குறைத்து நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தப்படும். தாய் விதை வேர்த்துண்டுகளை தவணைக் கட்டணத்தில் விற்கப்படுகின்றன. மஞ்சளின் உட்பொருள்களை அதிகப்படுத்த உதவும்.

**மல்லிகை**

அதிகப்படியான மணம் மற்றும் நறுமணம், மொட்டுப் புழுக்களின் பாதிப்பு இருக்காது. வருடம் முழுவதும் பூக்கள் பூத்துக்கொண்டே இருக்கும்.

**காய்கறிகள்**

மகசூல் 18% உயர்ந்து காணப்படும். சில சமயங்களில் வெள்ளரியின் மகசூல் இரட்டிப்பாகக் காணப்படும். ஆரோக்கியமான காய்களின் மேல் தோல்கள் பளபளப்பாக இருக்கும். இதனுடைய வாழ்வு நீட்டிக்கப்பட்டிருக்கும். காய்கள் நல்ல சுவையாகவும், மணமாகவும் இருக்கும். பொதுவாக பஞ்சகாவ்யாவை அனைத்து பயிர்களுக்கும் 30% அளவு தழை தெளிப்பாக பயன்படுத்தப் படுகின்றது ( 3 லிட்டர் பஞ்சகாவ்யாவை 100 லிட்டர் தண்ணீரில் கலக்கவும்).

**பரிந்துரைக்கப்பட்ட மருந்தளவு**

| **பயிர்** | **கால அட்டவணை** |
|---|---|
| நெல்1 | 0,15,30 மற்றும் 50வது நாட்களில் நாற்று நடுவதற்கு முன்பு பயன்படுத்தவும். |
| சூரியகாந்தி | விதைத்தபின் 30, 45 மற்றும் 60 வது நாட்களில் தெளிக்கவும். |
| உளுத்தப் பருப்பு | மானாவாரி : முதல் பூப்பிற்கும், பூர்த்திபின் 15 நாட்கள் கழித்தும் பயன்படுத்தவும்.<br>நீர்ப்பாசனம் : விதைத்தலுக்கு பின் 15, 25 மற்றும் 40வது நாட்களில் தெளிக்கவும். |
| பச்சைப் பயிறு | விதைத்தலுக்குப்பின் 15, 25, 30, 40 மற்றும் 50வது நாட்களில் பயன்படுத்தவும் |
| ஆமணக்கு | விதைத்தலுக்குப்பின் 30 மற்றும் 45வது நாட்களில் பயன்படுத்தவும் |

| | |
|---|---|
| நிலக்கடலை | விதைத்தலுக்குப்பின் 25 மற்றும் 30வது நாட்களில் பயன்படுத்தவும் |
| வெண்டை | விதைத்தலுக்குப்பின் 30,45, 60 மற்றும் 75வது நாட்களில் பயன்படுத்தவும் |
| முருங்கை | பூப்பதற்கு முன்பும் மற்றும் இருபுறமும் வெடிக்கனி உருவாகும் நேரத்திலும் பயன்படுத்தவும் |
| தக்காளி | நாற்றங்காலில் இருக்கும் பொழுதும் விதைத்த பின் 40வது நாளிலும் பயன்படுத்தவும் 1% கரைசலில் 12 மணி நேரத்திற்கு விதை நேர்த்தி செய்ய வேண்டும் |
| வெங்காயம் | விதைத்தலுக்குபின் 0,45 மற்றும் 60வது நாட்களில் பயன்படுத்தவும் |
| ரோஜா | கவாத்து செய்யும் போதும், மொட்டுகள் வெளிவரும் போதும் பயன்படுத்தவும் |
| மல்லிகை | மொட்டு அரும்பும் போது பயன்படுத்தவும் |
| வனிலா | கரணைகளை விதைப்பதற்கு முன் பஞ்சகாவ்யாவில் முக்கி வைக்க வேண்டும் |

**பஞ்சகாவ்யாவின் பயன்கள்**

**இலை :** பஞ்சகாவ்யாவை செடியின் மேல் தெளித்தால் பெரிய இலைகள் மற்றும் அடர்த்தியான மேற்கவிகையை உருவாக்கும். ஒளிச்சேர்க்கை முறை உருவாகி உயிரியல் திறன், கருத்தொகுப்பு அதிகளவு வளர்ச்சிதை மாற்றத்தை மற்றும் ஒளிச்சேர்க்கையை இயங்கச் செய்யும்.

**தண்டு :** அடிமரத்தின் அருகில் தண்டுகள் உருவாகும். அவைகள் வலிமையாகவும் மற்றும் அதிகப்படியான பழங்களை முதிர்ச்சியடையச் செய்யும். கிளைகள் பெரியதாகி வளரும்.

**வேர் :** வேர்கள் மட்டுமீறியும், அடர்த்தியாகவும் இருக்கும் வேர்கள் நிறைய நாட்களுக்கு நன்றாகக் காணப்படும். இந்த வேர்கள் ஆழமாக உட்சென்று பரவி வளர்ந்து காணப்படும். இவ்வகையான வேர்கள் அதிகப்படியான தண்ணீர் மற்றும் சத்துப்பொருட்களை உள் இழுக்கும்.

**மகசூல் ;** நிலங்களில் அங்கக வேளாண்மையிலிருந்து கரிமமற்ற அமைப்பிற்கு மாற்றினால் இயல்பான சூழலைவிட மகசூல் குறை வாகக் காணப்படும். முதன் முதலாக அறுவடை செய்த பிறகு கரிம மற்ற பயிர் வளர்ப்புஅமைப்பில் இருந்து அங்கக பயிர் வளர்ப்பாக நிலங்களை மாற்றும் பொழுது பஞ்சகாவ்யா அனைத்துப் பயிர்களின்



மகசூலை பழைய நிலைக்கே மாற்ற உதவும். 15 நாட்களுக்கு முன்னதாகவே அறுவடை செய்ய உதவும். இது காய்கறிகள், பழங்கள் மற்றும் தானியங்களின் வாழ்வு காலத்தை அதிகப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதன் சுவைகளையும் அதிகப்படுத்தும். விலை உயர்ந்த இரசாயனங்களை குறைத்தால் பஞ்சகாவ்யா அதிகப்படியான இலாபத்தையும், அங்கக விவசாயி களின் கடன் தொகைகளிலிருந்து விடுவிக்க உதவும்.

தகவல் : ***IV இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.***